ஓலை 71 | ஓசை 194 | மே 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்

## பொருள்

எதிரே நின்று கண்ணோட்டம் இல்லாமல்
கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம்;
நேரில் இல்லாதபோது
பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

கனிந்திருந்த காதலோடு கணவாநீ கரம்பற்றி
இனியவனே எனைநீயும் இதமாக இயங்கவைத்தாய்
பனிப்போலே பரவசமும் பட்டுதொட்டு படர்ந்ததுவே
நனித்தமிழில் நாணங்கள் நயமுற்றே நடைப்பழக

இன்பங்கள் இதயத்தில் இடைவிடாமல் எழுந்திடவே
துன்பங்கள் துறவறத்தை சொல்லாமல் தொடங்கியதே
அன்புள்ள அத்தானே அனைத்துமாகி ஆள்பவனே
என்சொல்ல என்நிலையை எழில்கொஞ்சம் ஈட்டிவிட்டேன்

இப்படியே என்றென்றும் இறுதிவரை இணைபிரியா
ஒப்பில்லா ஒற்றுமையில் ஒன்றாக உலவிடுவோம்
முப்பிறவி முடிச்சிடவே முகைத்ததுவோ மூன்றுமுடி
எப்பொழுதும் இல்லறத்தை இசைவாக இசைத்திடுவோம்



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# இனியேனும் இணைய மோசடியில் ஏமாறாதீர்

புதுச்சேரி செய்திகளில் அன்றாடம் காண்பது
விதவிதமாய்த் தொடர்கின்ற இணையவழி மோசடிகள்!
இல்லத்திலிருந்தே ஏராளமாய் ஈட்டிடலாம் வருமானமென
தொலைவரி மென்பொருளில் தொடர்ந்துவரும் குறுஞ்செய்தி!
பணத்தையும் செலுத்தி, இட்ட பணிமுடித்து
பணம்வரக் காத்திருந்து அடைகின்றார் ஏமாற்றம்!
ஆவணங்கள் இல்லாமல் உடனடிக் கடன்வழங்கல்
அதற்கான இணைப்பினைச் சொடுக்கி கடன்பெற்றால்
வட்டியுடன் கடனை அடைத்த பின்னும்
மேலும் பணம்கேட்டு மிரட்டல்கள்! தரவில்லையெனில்
ஆபாசமாய்ச் சித்தரித்து புகைப்படத்தை வெளியிடுவோமென
தொடரும் மிரட்டல்கள்! பயந்து பணம்செலுத்தி
கடனாளி ஆகின்றார்! பகுதிநேர வேலையாக
பிட்காயினில் முதலீடு அதிகளவில் பணத்தை
ஈட்டிடலாம் என நம்பவைத்து பணம்பறிப்பு!
வங்கி அதிகாரி எனப் பொய்யாகப் பேசி
வங்கி அட்டை, கடனட்டை விவரங்களை
வாங்கி பணமெடுக்கும் மோசடிகள்! பெண்கள்
பெயரில் போலி கணக்குகளை உருவாக்கி
நண்பர் கோரிக்கையை அனுப்பிடுவர்! நம்பி
இணைந்தால் நம் தகவல்கள் அவர்கையில்!
பணம்வேண்டி நீங்கள் அனுப்புவதாய் பலருக்கும்
வேண்டுகோள் அனுப்பி பணத்தைப் பெற்றிடுவர்!
நண்பர்கள் நம்மைத் தொடர்பு கொண்டால்தான்
நமக்கிந்த விவரமே தெரியவரும்! சட்டவிரோத
பொருட்கள் பார்சலில் வந்திருப்பதாய்க் கூறி
மிரட்டிடுவார் காவல்துறை அதிகாரி போர்வையில்
மோசடிப் பேர்வழிகள்! வழக்குகளுக்கு அஞ்சிடும்
பலர் அனுப்புகின்ற பணத்தைச் சுருட்டிடுவர்!
சலுகை விலையில் புடவைகள் துணிமணிகள்
மலிவாகக் கிடைப்பதாய் விளம்பரங்கள்! நம்பினோர்
எளிதாய் ஏமாந்து பணத்தை இழக்கின்றார்!
பழைய பொருட்களை விற்பதாய் மோசடி!
இத்தனை செய்திகளை நித்தமும் படித்தாலும்
கற்றவர்களும் ஏமாறுதல் கவலைதரும் நிகழ்வன்றோ?




கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# மீண்டும்

பாலைவன மணல்தனில்
பாதங்கள் பதிந்தாலும்

காட்டு வழிப் பாதையில்
கால் தடம் தொலைந்தாலும்

தட்டித் திறக்கா கதவுகள்
திறவுகோல் மறுத்தாலும்

எதிர்மறைக் கரையான்கள்
ஏணியை சிதைத்தாலும்

கறை படா எண்ணங்களை
கல் கொண்டு அடித்தாலும்

பார்த்துத் தோண்டிய பள்ளங்களில்
பாதங்கள் புதைந்தாலும்

அத்தனை முயற்சிகளிலும்
அறுந்த பட்டம் சிரித்தாலும்

கைகளை வளைத்து
முதுகை தட்டுங்கள்

கண்ணாடி முன்
கர்வம் கொள்ளுங்கள்

மூச்சு முட்டி
பிறப்பெடுங்கள்

மீண்டும் ஒரு
முயற்சி செய்யுங்கள்

தீரா ஒழுக்கத்துடனும்
மாறா நேர்மையுடனும்

ஏனெனில்
நதிநீரில் நடுக்கம் கொள்வது
பிம்பம் மட்டுமே நிலவு அல்ல



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# ஓரெழுத்து! ஒரு மொழி

ஆவே மனையின்
ஆக்கம் அன்றோ.
அம்மா என்றே
அழைக்கும் அதுவே.

பே கருவுற
பெய்யும் கனமழை.
மழைத்துளி மண்ணில்
ஏயெனத் தைக்கும்.

ஐயின் சொல் கேட்க
ஐது நொய்தாகப்
பணி சிறக்குமன்றோ.

வெயில் நுழைபறியா
குயில் நுழை கா.

அகழ்வாரைத் தாங்கி
அன்போடு ஏந்தும் கூ.

எல்லோரும் வாழ்க்கை
ஏற்றமாய் வாழ்ந்திடப்
பேணிடுக,' கை 'யை!

செங்கோன்மையே கோவின்
சீலத்தைச் சொல்லும்.

வளியால் உலா போகும்
வானில்,' பே'.

பிறரின் மனதை
நோக வைக்கும்
பலரறிச் சொல்லே,' சீ!

பதவி வந்திடப் பணிவு கொண்டால்
வாழ்வில் வருமே ,'சே'!

செல்வந்தர்க்குக் காப்பு
'சோ 'வின் உயர்வு!..

கூவின் கூரை
மீ தனிலிருந்து
எல்லை தருநன்
பல்கதிர் பரப்புமே.
அல்லை விரட்டும்
அழகான தண்மதியே.

தீ தொட்டல் சுடும்
பட்டால் எரியும்.
பற்றிப் படர்ந்தால்
அனைத்தும் சாம்பலே.

அகத் தூ வாய்மையால்
அமையுமன்றோ.
புறந் தூ தண்ணீரால்
அமையுமே!

இரவலர் ஈயெனும் முன்
இருப்பதை ஈதலே அறமாம்.

நேயொன்றே தெய்வத்தன்மைத்தாம்.
நே நீங்க யாவரும் மாக்களே.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

# தமிழர் மரபு

## தன்முனைக் கவிதைகள்



கைகூப்பி வணங்குதல்
தமிழரின் மரபாம்
கைகுலுக்கி வரவேற்றல்
மாறிவிட்ட மரபாம்

இசையும் நடனமும்
இனிமை தந்திடும்
தமிழர் வாழ்வில்
கலைக்கே முதலிடம்

சங்கத் தமிழனின் ஆற்றல்
ஐவகை நிலப் பகுப்பு
தொல்காப்பியன் தந்தான்
தமிழின் இலக்கண மரபு

இயற்கையோடு ஒன்றியதாம்
தமிழனின் வாழ்வு
இதை அறிந்து ஒழுகின்
வந்திடாது தாழ்வு

இயற்கை வழிபாடு
தமிழனின் சிறப்பாம்
குறிஞ்சியின் அழகன்
குமரனே தலைவனாம்

அகத்திணை ஒழுக்கம்
அன்பைப் பெருக்கியது
புறத்திணை ஒழுக்கம்
வீரத்தை ஊட்டியது

தை முதல் நாளே
தமிழர் திருநாளாம்
இதை அறிந்து நாமே
இனிதே கொண்டாடுவோம்

கவிஞர் சே.ர. ஸ்ரீதரன், இலங்கை

# துளிப்பாக்கள்

ஆசையைத் துறந்த புத்தனின்
தலையில் நறுமணம் கமழும்
ஒற்றை ரோஜா.

செய்த குற்றத்தை மறந்து போனேன்.
இன்றுவரை நினைவில் வைத்திருக்கிறது.
என்னை நான் செய்த குற்றம்.

பிணங்கள் தொகை அதிகரிப்பு
புதைக்க இடமில்லை.
மின்தகனம்.




தூற்றும் தானியத்தில்
காற்றின் திசையெங்கும்
குவியும் பதர்கள்.

தீப்பற்றி எரியும் காட்டில்;
மாய்த்துக் கொண்ட மூங்கில்;
இசைக்கிறது சோககீதங்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# மயக்கும் தேவதையே



எழில்மிகு பெண்ணே
மயங்குகிறேன் கண்ணே

தடாகத்துத் தாமரையோ
தளிருடல் மேனியோ

பூவின் மென்மையோ
பூலோக ரம்பையோ

அன்னத்தின் அழகே
அமுதூறும் இதழே

வஞ்சியின் வதனமே
வாஞ்சையான வடிவமே

மையிட்டப் புருவமே
மயக்கும் தேவதையே

விம்மிய நெஞ்சமே
நித்தமும் கொஞ்சிடுமே

பாவையின் பார்வையே
மன்மதனின் காதலம்பே

பூபாளத்தின் இசையே
செந்தமிழ்ப் பாடலே

அணைத்திடும் ஆரணங்கே
தித்திக்கும் செந்தேனே

உள்ளத்தில் உறைந்தேனே
உயிரினில் கலந்தேனே

உறவாகிக் களித்தேனே
உரிமையில் திளைத்தேனே

வானத்துத் தாரகையே
கார்குழல் காரிகையே

சிற்றிடையில் சிதைந்தேனே
குறுநகையில் புதைந்தேனே

வண்ணமிகு ஓவியமே
இலக்கணமானக் காவியமே

வேல்விழியால் கவர்ந்திட்டாய்
சிந்தையில் நிறைந்தவளே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# வாழ்க்கையுடனான விளையாட்டு

வாழ்க்கை
ஒரு தீராத புதிர் விளையாட்டை
மனிதர்களிடம்
விளையாடிக் கொண்டே இருக்கிறது

ஒவ்வொருவரும் விளையாட்டில்
பாதியில் இணைகிறோம்
பாதியில் விலகுகிறோம்
தொடர் சங்கிலியின் ஒரு கன்னியாக
ஒவ்வொருவரும் மாறி மாறி
இணைந்து விலகி
சுழன்று கொண்டே இருக்கிறோம்.

தொடர் விளையாட்டு
எப்படி எவ்விதம் முடியும் என்பதை
யாருமே அனுமானிக்க முடிவதே இல்லை.
வினாடிக்கு வினாடி
ஒரு மாய யதார்த்த உலகை உருவாக்கி
உறவுகளை அடையாளத்துடன் பின்தொடர
வைத்துக் கொண்டே இருக்கிறது.
உறக்கத்தில் நனைந்த கனவுகளாக
நினைவுகள் மட்டும்
ஒளிர்ந்து நீடித்திருக்கின்றன



வாழ்க்கையுடனான விளையாட்டில்
சந்தோஷம், துக்கம்
இரண்டின் எல்லையிலும்
கண்ணீரின் நீரோட்டம் மட்டும்
வற்றாத நதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

வாழ்க்கையுடனான விளையாட்டில்
வாழ்க்கை உணர்த்தும் பாடம்
புரிந்தும் புரியாமலும்
இருந்து கொண்டே இருக்கிறது.

*கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு*

# கிருஷ்ணகிரி

எந்தன் ஊராம் கிருஷ்ணகிரி
நான் பாடுவேன் என் ஊரின் புகழைப்பாடி

தாயிடமிருந்து பிள்ளையை பிரித்தது போல
தர்மபுரி மாவட்டமாய் பிரிந்ததே கிருஷ்ணகிரி .




முக்கனியில் முதல் கனி மாங்கனி
சில நாடுகளுக்கு அனுப்பப்படுவது சிறப்பு தனி

காதலர் தினத்தின் அடையாளமே ரோஜா தானே!
இம்மலர்களும் பூத்துக் குலுங்குகின்றன மகிழ்ச்சிதானே

பல தொழில்கள் சிறப்பும் பெற்றது என் ஊராம்
மக்களும் சந்தோசமாய் வாழ்கிறார்கள் என்பது அதன் பேராம்

சந்திர சூடேஸ்வரர் மற்றும் பார்வதி தேவியின்
பசுமைவண்ண திருக்குளமும் உண்டு
கிருஷ்ணகிரியின் மலைகளும் கருமை நிறமுண்டு

கிரி என்றால் மலை கிருஷ்ணரின் வடிவம் கருமை
அதனால்தான் என்னவோ
கிருஷ்ணகிரி என்ற பெயர் விளங்குகிறது ஊரின் பெருமை
ஊரின் பெயருக்கும் என்ன ஒற்றுமை!

கவிஞர் ஆ கிருஷ்ணவேணி

# பிரிவின் வலி

அன்பானவர்களை
இழப்பதன் வலி
ஐயறிவுகளுக்கும்
அதிகமாகவே உண்டு.

தொடர்பாடலில் உண்டு
இங்கு வேறுபாடுகள்
உணர்வுகளில் தெரியும்
வலியின் வெளிப்பாடுகள்

இழப்பவை அறியும்
இழப்பின் வேதனைகள்.
அன்பின் ஆழம்
பிரிவில் தான் தெரியும்.



இறந்தாலும் இடையில்
இறவாது பிரிந்தாலும்
இதயம் நொந்துடைதல்
இரு திணைக்கும் ஒன்றாகும்

பிரிவின் துயரங்களை
சொல்லவும் முடியாமல்
மெல்லவும் முடியாமல்
மௌனிப்போரிங்கு ஏராளம்.

கவிஞர் செண்பகச் சோலையாளர், ஆய்ஷ்

13.ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை .

1. அமுதசுரபி அருளிய ஆபுத்திரன் வரலாறு'.
"மாபெரும் பாத்திரம் மடக்கொடிக்கு அருளிய
ஆபுத்திரன் திறம், அணியிழை! கேளாய்" ( மணிமேகலை)

2. பெற்ற குழந்தையை விட்டுச் சென்றாள்.
மறை ஓதும் அந்தணன், அபஞ்சிகன், வாரனாசி அவன் ஊர்
முறைப்படி சாலியை மணமுடித்து மகிழ்ந்து வரும் காலை
கறை படிந்த சாலி கற்புநெறி மாறி ஒருவனோடு கலந்தாள்
மறைவாக பிறந்த ஆண் சிசுவை தோட்டத்தில் கிடத்தினாள்

3. தாயான பசு .
தாயில்லாத அக்குழந்தை தனியே பசியால் துடித்தது, அழுதது
சேயின் அழுகுரல் கேட்டு அவ்விடம் ஓடி வந்தது ஒரு காராம் பசு
வாய் விட்டு பாலின்றி அழுத மழலை பசி அறிந்து பால் சொரிந்தது
சேயின் துயர்தீர்த்த பசு ஏழு நாட்கள் குழந்தையைக் காத்து நின்றது




4. தவப்புதல்வன்
வேதக் கலை கற்ற இளம்பூதி அந்தணன், ஊர் வயனங்கோடு
வேதனையோடு தனியே கதறிக் கிடந்த குழந்தையைக் கண்டான்
ஆதரவோடு எடுத்து அணைத்து தன் குழந்தையாக வீடு வந்தான்
"சீதனமாக கிடைத்த தவப்புதல்வன்" மனைவியும் அக மகிந்தாள்

5. ஆபுத்திரன்
சிறுவன் ஆகம விதிகளுடன் அறம் சார்ந்து நன்கு வளர்ந்தான்
வறுமை நீங்க ஒரு அந்தணன், வீட்டில் பசு வேள்வி நடத்தினான்
மறுக்க முடியாத பசு உயிர்பலிக்குப் பயந்து தப்பிக்கத் திணறியது
"நிறுத்தியே ஆகவேண்டும் யாகத்தில் கோமாதா பலி இடுவதை"

நள்ளிரவில் பசுவின் துயர் நீக்க அவிழ்த்துச் சென்றான் அடுத்த ஊர்
பள்ளிகொண்டிருந்தவர்கள் விடியலில் பசுவைக் காணாமல் தேடினர்
தள்ளி மறைவாகச் செல்லும் ஆபுத்திரன் அவர் கைகளில் பிடிபட்டான்
துள்ளி ஓடும் பசுவைப் பிடித்தனர் ஆபுத்திரனைக் கோலால் அடித்தனர்.

"மனிதனுக்குத் தோழனாக வருகிறது பசு யாரையும் துன்புறுத்தாது
மனிதனை வளர்க்கிறது, பசுபுல்லைத் தின்று பால் தருகிறது தாய்போல்
புனிதமான பசுவை வேள்வியில் பலியிடுவது பாவம் இல்லையா உணர்க
இனிமேலாவது திருந்தி உங்கள் எண்ணத்தை கை விடுங்கள்" கூறினான்

"உன் கதை எங்களுக்குத் தெரியும் நீ வேசி மகன் மற்றும் 'ஆ மகன்'
அன்னியனிடம் கற்பிழந்து கணவனால் துரத்தப்பட்டு குமரி வந்தாள்
உன்னைப் பெற்று எப்படி வளர்ப்பது தோட்டத்தில் போட்டுவிட்டாள்
அன்னையின் அன்பு இல்லாமல் மிருகத்தோடு மிருகமாக வளர்ந்தாய் நீ"

"அந்தணர்களே வேதங்களை உணர்த்தவர்களே சொல்வதைக் கேளுங்கள்
இந்த வேதங்களுக்கு முதல்வன் பிரம்மன் வேசியான திலோத்தமை மகன்
அந்த வசிட்டர் , அகத்தியர் பூணூல் அணிந்தவர் அந்தணர்கள் கிடையாது
சிந்தித்துப் பார் மனிதர் யாவரும் சமமே" எள்ளி நகைத்தான் ஆபுத்திரன்
கோபங்கொண்ட அந்தணர்கள் அவனை ஊரைவிட்டு விரட்டினார்கள்
தாபசி ஆபுத்திரன் கையில் பிச்சைப் பாத்திரம் மட்டும் மிஞ்சியது .
கோபமற்ற ஆ மகன் ஊர் ஊராக பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தான்.
பாபமற்றவன் கிடைத்த பிச்சை உணவை மற்றவர்க்குக் கொடுத்தான்
( தாபசி : துறவி)

...தொடரும்

கவிஞர் ந. திருக்காமு

# கவிதை எனும் கடல்



வெற்றுக் காகிதத்தில் எழுதத் தொடங்கினேன்
வெற்றாய் நின்றது எனது இதயம்
தேடலில் என் உள்ளம் சென்றது
தேடி தேடி எழுதியதில் மகிழ்ந்தேன்
கவிதை கற்பனையில் உதித்து சிரித்தது
கடல் போன்ற மலையையும் கண்டேன்
வித்தியாசமான நோக்கில் எனது பயணம்
விசித்திரமான உலகில் எட்டாத அதிசயம்
நாள்தோறும் எழுதி எழுதி முத்தானது
வரிகள் யாவும் வைரமாய் மின்னின
வளர்ச்சியைக் கண்டு நானும் வியந்தேன்
நொடிப் பொழுதும் எழுதுவதை விடவில்லை
நொடிகள் பாடத்தை கற்று தந்தன
எழுதுகோலும் என்னை புரிந்துக் கொண்டது
எழுத்துலகில் மணி மகுடமாய் நின்றேன்
மணிகள் கோர்த்து அழகாக்குவதுப் போல
மணியானது எனது புத்தகத்தின் கவிதைகள்

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# நான் சிரிக்கிறேன்

என்னை சுற்றியுள்ளவர்கள்
என்னிடம் சொன்ன ஒரே வார்த்தை

எந்நேரமும் நான்
நன்றாக சிரிக்கிறேன் என்பது தான்

ஆம் எந்நேரமும் நான்
சிரித்துக் கொண்டுதான் இருக்கிறேன்

என் கவலைகளை மறைக்க சிரிக்கிறேன்
என் கண்ணீரை மறைக்க சிரிக்கிறேன்

என் வலிகளை மறைக்க சிரிக்கிறேன்
பிறர் கேலியிலிருந்து
என்னை பாதுகாக்க சிரிக்கிறேன்



என் வாழ்வில் நான் தொலைத்ததை
நினைத்து சிரிக்கிறேன்

எனக்கு தேவையானது கிடைக்காத போதும்
நான் சிரிக்கிறேன்

நான் நிராகரிக்கப்படும்
இடங்களில் எல்லாம் சிரிக்கிறேன்

பிறர் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்ட போதும்
நான் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறேன்

சிரிப்பதால் என்னை நானே
பலப்படுத்திக் கொள்கிறேன்

அதனால் நான் எப்பொழுதும்
சிரித்துக் கொண்டுதான் இருப்பேன்

கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம் இலங்கை

# யாசிக்கிறேன் மன்னிப்பை என் எழுத்தில்

முகமறியாத முகநூலில்
கவித்துவமாய் கவிபடைப்பைக் கண்டேன்.
அதனோடு குரல் வடிவம் தந்து
உயிரூட்டக் கண்டேன்.
அவ்வடிவங்கள் நெஞ்சுரிகிட
பித்தென்றாகி தொடர்ந்தேன்.

வரம் என்பதா அருள் என்பதா
அதிர்ஷ்டம் என்பதா பொக்கிஷம் என்பதா.

பேச்சு தொடர் கிடைத்திட
வாய்ப்பும் அமைந்து விட.
அழகாய் பூத்தது நட்பொன்று
காலம் இயற்றிய விதியெனும்
நட்பின் வரவை நினைவெனும்
வீணைக்கொண்டு மீட்டுகிற போது.

தவறிய நேரத்தில் குளறி விட்டாய் ஏனோ
புரிந்து விடேன் அன்பே.
மன்னிப்பை யாசிக்கிறேன்
என் எழுத்து வழியே.

நட்பின் உறுதி நட்பின் உரிமை
நட்பின் ஆரதூரம் நட்பின் தாற்பாரியம்
உன்னில் கண்டேன்.

உந்தன் கோபச்சிமிழியை அகற்றும்
வழித் தெரியாமல் தனித்துக்கிடக்கிறேன்.
தமக்கையிடம் உந்தன் கோபத்தைச் சொல்ல
சிரித்து சொல்கிறாள்.
நீயே பார்த்துக் கொள்ளென்று.

தூதனுப்பி உன்னை சந்தித்து வர
வெண்புரவி ஒன்றும் என்னிடம் இல்லையே.
தென்றல் காற்றாகிருந்திருக்க நீ இருக்கும் தேசம் வந்து
கேசம் கோதி மன்னிப்பை யாசித்திருப்பேன்.
பூங்காற்றாகிருக்க வாசமாக உன்னை தொடந்திருப்பேன்.

நேசமாகிப்போனதால் மன்னிப்பை யாசிக்கிறேன்.
எந்தன் எண்ணத்தில் சேர்ந்த நீ
உன்னில் என்னை ஏற்றினாயோ
இல்லை மறந்தாயோ.

மன்னித்து விடு நட்பே
காலங்கள் பல கடந்தாலும்
உந்தன் நியாபகம் மாறாதே.

இது பலகாலம் தொடரும் நட்பு.



கவிஞர் சுஹீனாஸ் பேகம், இலங்கை

# சமர்ப்பணங்கள்

அதிகாலை எழுந்து
அமைதியான மனதோடு

அன்றைய பணி எண்ணி
அட்டவணையில்லாமலே திட்டமிட்டு

அங்கங்களை சுத்தம் செய்து
அகத்திலே மகிழ்வோடு

அவரவர் தேவையை
அலுக்காமல் செய்திட்டு

அடிவயிற்றுபசி பொருட்படுத்தாது
அதரங்களில் புன்னகையோடு

அடுத்தடுத்து மணிகளிலே
அவசரமாக நகர்த்திட்டு

அருவியாய் வியர்வைத்துளிகள்
அதைத்துடைத்திட நேரமில்லாது

அகத்தினுள்ளே அலைந்து திரிந்து
அனுகூலம் எதிர்பாராமலே

அத்தனை பொறுப்புகளையும்
அமராமல் இழுத்துப்போட்டு செய்திடும்

அவதிப்படும் உடல் வலியோடும்
அடிவயிற்று வலி தாங்கிட்டு

அந்த 3 நாட்களிலுமே
அள்ளித்தெளித்த புன்சிரிப்போடு

அவளில்லா இல்லகம் ஏது?
அவளுக்கென தனி அலங்காரமும் ஏது?

அன்னையே அற்புத கருணையே
அகிலமெல்லாம் வாழும் தாய்குலங்களுக்கும்

அடியவளின் கவி வரிகளிலே
அன்பான சமர்ப்பணங்கள்!



கவிஞர் நீலாசுபாஷ், ஆத்தூர்

# முள்ளிவாய்க்கால்

தென்னவர் கருகி வீழ்ந்திட
வந்தவன் எக்காளமிட
உதிரிகளாக வீழ்ந்த உயிர்கள்
தெறோச்சி பொழிந்த கடுகு மழை
பூந்தளிர் பொசுங்கி வீழ
கருமை சூழ்ந்த பொழுதுகள்
கண்ணீர் நனைத்த நிலம்
கூற்றுவன் கூனி குறுகிப்போனான்
கொடியோர் தீ வினை கண்டு
உலகு ஊமையாகிய போன நாள்
நாதியற்ற தமிழினம்
ஆற்றுப்படுத்த யாருமில்லை
அழுகை துடைத்திட கையும் இல்லை
நீங்கா நினைவுகளுடன்
கண்ணீர் குடிக்கும் முள்ளிவாய்க்கால்



கவிஞர் சே. தமிழ்நேயன், தமிழ் நாடு

# மாறுபாடில்லா உண்டி மறு

மாறுபாடில்லா உண்டி மறு
உணவின் பந்தத்தை அறு

உறவை அறுத்தால் துறவு
உணவை மறுத்தால் நோன்பு
உறவுகளை துறப்பவன் ஞானி
உணவுகளை துறப்பவன் யோகி

வருமுன்னர் காவாதான் வாழ்க்கை?
தீதும் நன்றும் பிறர் தர வருகுதில்லை
மாறுபாடில்லா உண்டி மறுப்பது அழகு
அதை ஒதுக்கப் படிப்படியாக பழகு

விழியில் விழுந்து வயிற்றில் நுழைந்து
உடலை வருத்தி ஆயுளை சுருக்கி
ஆட்டம் போடுது துரித உணவு
எல்லாம் பந்நாட்டு கொள்(கை)ளை கனவு

நீ உண்பது நீ உருவாக்கியதா?
உன் மண்ணில் விளைந்ததா?
உன் தட்ப வெட்பம் அறியுமா?
உன் நலனுக்கு உகந்ததா?

ஏதும் தெரியாது
உனக்கிப்போது புரியாது
தாய் தந்தை வேலையை விளம்பரங்கள் செய்கிறது
வருந்தி அழைகக்குது பிணியை

எதைத் தள்ள? எதைக் கொள்ள?
யார் தீர்மானிப்பது?
பண்பாடா? கலாச்சாரமா?
மண்ணா? பண்ணா?

பாலை வனத்தில் தெரிவு கிடையாது
பசுஞ் சோலையில் அறிவு கிடையாது
முதல் நாகரீகமே உணவை சார்ந்தது
இல்லை எனில் அநாகரிகம் அது

விழித்துக் கொள்வோர் பிழைத்துக் கொள்வர்
விதண்டாவாதம் பேசுவோர் உயிரை விடுவர்
உணவில் வரட்டும் விழிப்புணர்வு
நலமாக விளையும் நல்வாழ்வு



கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு திருச்சி

# விரும்பாத வாழ்வு

## தன்முனைச் சாரல்

தற்போது மருத்துவர், "இனி மருத்துவம் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. இல்லத்திற்குக் கூட்டிக் கொண்டு இறுதி வரை பார்த்துக் கொள்ளுங்கள்"; என்று என் பாட்டனாரின் இறுதி நாட்களில் சொல்லிவிட்டார்கள். ஒரிரு நாட்களில் அவர் வாழ்வும் முடிந்தது.

பல வயதானவர்கள்,தம் மனத்தளவிலும், உடல் அளவிலும சிறிது சிறிதாக மரணத்தை நோக்கி நகருகிறார்கள்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பல நோயாளிகள் மருத்துவத்திற்கு வழியின்றி,இறுதி நாளை எதிர்பார்த்து, துன்பத்திலும் வலியிலும் உழலும் அவலம்.

பாலின நோயால் பாதிக்கப்பட்டு உறறோரால் கைவிடப்பட்டவர்கள்..மன நோயால் பீடிக்கப்பட்டு, உறவினரால் மறக்கப்பட்டு நாதி அற்றவர்கள்.

இப்படியாக இவ்வுலகில் வேண்டா வாழ்வை விரும்பாமல் சுமக்கும் ஆதரவற்றோர் அநேகம்.

இந்த துன்ப இயல் வாழ்விற்கு நம் சமூகம் என்ன பதில் வைத்து இருக்கிறது?

**எத்துணை துன்பம்**
**வைத்தாய்; இறைவா!**
**இன்னுயிர் எனக்கு வேண்டாம்**
**அத்துணை அவதியுடன் இறைவா**

*கவிஞர் சசிகலா விஸ்வநாதன்*

# சிரித்துக்கொண்டு வாழ்கிறேன்

தவறு செய்யாமல்
தண்டனை பெற்றவன் நான்

பிழைகள் செய்யாமல்
பல வழிகளை சந்தித்தவன் நான்

சுயநல உறவில் சிக்கப்பட்டு தேவைகள் முடிந்ததும்
தெருவில் தள்ளப்பட்டவன் நான்

ஓய்வு நேர தேவைக்கு பயன்படும்
பொருளாக பயன்படுத்தப்பட்டவன் நான்



மறக்க முடியாத நினைவுகளை தந்து
மன மாறியதும் மரணத்தில் தள்ளப்பட்டவன் நான்

குற்றங்கள் பல சுமத்தப்பட்டு
பதில் கூற முடியாத நிலையில் ஒதுக்கப்பட்டவன் நான்

ஒதுக்கப்பட்ட நானே சிரித்துக்கொண்டு வாழ்கிறேன்
ஒதுக்கியவர்கள் கண்ணீரில் மிதக்கிறார்கள்.

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# தத்துப்பிள்ளை

என் உயிரானவனின்
உயிரினைச் சுமந்திட
காத்திருந்தேன் பல
காலங்களாக
கடவுளும் இரக்கம்
காட்டவில்லை எனக்கு
உறவினர் ஒதுக்கினர்
ஊரார் தூற்றினர்
ஆனால் கண்ணியமிக்க
என் கணவன் என்னை
கைவிடவில்லை
மகள் , தங்கை
மனைவி , மருமகளென
பல பெயர்களைச்
சொல்லி அழைத்தவர்கள்
பிள்ளை இன்மையால்
மலடி என அழைத்தனர்
மனம் வருந்தி நின்றவேளை
அம்மா என நீ அழைத்தாய்
என் ஜென்மம் ஈடேறியதாய்
உணர்ந்தேன் குழந்தாய்



ஊரார் உறவினர் ஆயிரம்
சொல்லட்டும்
உன்னை தத்துப் பிள்ளையென்று
கவலைப்படாதே மகனே
தத்தெடுத்த பிள்ளையென்று
உன்னைப் பழித்தவரிடையே
தலை நிமிர்ந்து சொல்
தாய் , தந்தை உனக்குண்டென்று
தாயாக என்னை உணர வைத்த
நீ என்றும் என்னுயிர் பிள்ளையே.

கவிஞர் தி. டனேஸ்ரி, மட்டக்களப்பு (இலங்கை)

# தீவிரவாதம்

அறமில்லா வாழ்வை
அணுகுவதே தீவிரவாதம்.
அமிர்தம் நஞ்சாவதும்,
அறமான வாழ்வை
அளவுக்கு அதிகமாக்கினாலும்
அதுவும் தீவிரவாதம்.
வெட்டியவனுக்கும் ஏன் வெட்டினோம்
என்று தெரியவில்லை
வெட்டப்பட்டவனுக்கும் ஏன்
வெட்டப்பட்டோம் என புரியவில்லை.
வேண்டாமே இந்த தீவிரவாதம்.
மனித உயிர்கள் அத்துனை மலிவானாதா!
எப்போது அறிவோம்?
ஆகச்சிறந்த விலைமதிப்பற்ற
ஒன்று உயிரென்று,
தீவிரவாதத்தை வதம் செய்து
தீவிரமாக்குவோம்.



கவிஞர் பானு அப்துல்லா

# நான் எனும் நான்

பெண்ணின் பின்னே செல்ல
நானொன்றும் பித்தனல்ல.
எல்லாம் துறந்து கொள்ள
போதிமர புத்தனல்ல.
சித்தம் தெழிந்து கொண்ட
பரமசிவ பக்தனல்ல.
ஆசைகள் அதிகம் கொண்ட
அடங்கா மனிதன் நான்.



கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# மீண்டும் ஒன்றிலிருந்து

அன்பான புரிந்துணர்ந்த மனைவி

அம்மாவே மகளாய் வந்த அதிசயம்
வீரத்தின் வித்தாய் மகன்

விசாலமான வீடு நோயற்ற உடல்
கவலை துறந்த வாழ்வு
உடலும் மனமும் பணியாய் நனைய.

திடுக்கிட்டு எழுந்தேன்
ஓட்டை குடிசையில் ஒழுகும் மழை நீரில்
நனைந்தது உடல் மட்டுமல்ல
வித்தாய் நினைத்து நச்சாய் போன
என் வாழ்வும் தான்.

வாழும் வரை போராட்டம் வாழ்க்கையில் இல்லை
வசந்தம் வசந்தத்தை எதிர்பார்த்து
என் வாழ்வும்தான் முடிந்திடுமோ.

பிள்ளைகளின் விரல் பிடித்து
தொலைத்திட்ட வாழ்வுதனை தேடுகிறேன்
மீண்டும் ஒன்றிலிருந்து.



கவிஞர் ஜேபபி (@) பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# சிந்தனைக்கேது சிறை

மீளாமல் மீண்டதாக
தினம் நகரும் உணர்வில்.

தந்தி கம்பியின்
துளை தவிர்த்த இழை

மீட்டியதொரு ராகம்

சாளரத் தென்றலும்
தன்னோடு அழைத்துப்
போனதாக தகவல்



இமை திறவா விழிக்குள்
எத்தனை மொழிப்பேசி
இதமாக தினம் கடந்தது

சிந்தனைக் கேது சிறை

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# தொடரும் ஒட்டங்கள்

இளைத்து கருத்தவளின்
இதயம் பேசியது
தோப்பாக நினைத்தது
நிறைவேறியது
தனித்த மரமாகிப் போனேன்
காலத்தில் பிடிக்குள்
எனை தொலைத்து
நாளாகிப்போனது
மவுனத்திடம் மட்டும் பேசுகிறேன்
தடையின்றி
குறைகூறாத துணையாகிப் போனது
குற்றம் பேசும் உறவுகள்
வழித்துணைக்கு வருவதில்லை
நாக்கு மட்டும் வம்பிற்கு இழுக்கும்
நாசுக்காய் நகர்த்திவிட்டு
நகரும் நாட்கள்
தொடரும் ஒட்டங்கள்



கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி, நாகை மாவட்டம்

# கனி

பழங்களின் சிறப்பு
இயற்கை தந்த ரசிப்பு

ஆதி குடிகளின்  பசிக்கு ருசிக்க வைத்தது
இனிப்பு ,புளிப்பு ,கசப்பு , துவர்ப்பு,
உவர்ப்பு ,உறைப்பு இவையும்
தனித்தன்மையை கொண்டாடியது.



கடும் வெப்பம் தீர்க்க இளநீர்
உடல் சோர்வு கண்டால் மாதுளை
நீயும் இலைப்பாற கரும்புச்சாறும்
சிறுபிள்ளை அழுகை போக்க வாழைப்பழமும்
தொட்டால் கை மனக்கும் பலா பழம்
சீண்டியவள் திரும்பி பார்க்க ஆப்பிள்.

நீயும் நோய் இன்றி வாழ்ந்திட
நித்தமும் ஒரு கனி சுவைத்திடு.

கவிஞர் கணிதன் மா. சரவணன், இலங்கை

# ராணுவ வீரர்கள்

தேசத்தின் வரைபடத்தில் அல்ல
மண்ணின் உறக்கத்தில் மயக்கமல்ல
நரம்புகளின் இயக்கத்தில் வீரமென்றே
உணர்வுகளின் பிணைப்பில் பற்றென விளைந்தே
நாட்டின் எல்லையெங்கும் சுவாசமென நிறைந்தே
காத்திடும் வீரனின் மனதினில் பெருகிடும்
காவலின் வேலையில் காலமே வளைந்திடும்
இல்லத்தைத் துறந்து இன்பத்தை மறந்து
இன்பத்திலும் துன்பத்திலும் கடமையைக் கைக்கொண்டு
விழியினில் தேசமென்றும் வீரத்தில் பாசமென்றும்
மொழியினை மறந்தும் மூச்செனக் காத்திட
நடமாடும் கடவுளாய் நம்மைக் காத்திடும்
ராணுவத்தின் திறமையை தலைவணங்கி வாழ்த்தியும்
வீரனின் கடமையை வெற்றியெனப் போற்றியும்
பெருமை கொள்வோம் இந்தியனாய் நின்றே.



கவிஞர் இளையவன் சிவா நரசிங்காபுரம்

# பசி

அன்புப் பசிக்கு அன்னை
அறிவுப் பசிக்கு ஆசான்
ஆசைப் பசிக்கு தேடல்
ஆணவப் பசிக்கு தண்டனை
இசைப் பசிக்கு கீதம்
இன்பப் பசிக்கு இன்சொல்
ஈகைப் பசிக்கு கொடை
ஈதல் பசிக்கு புகழ்
உணவுப் பசிக்கு அறுசுவை
உறவுப் பசிக்கு உடன்பிறப்பு
ஊமையின் பசிக்கு உணர்வுகள்
ஊடகப் பசிக்கு தகவல்
எழுத்துப் பசிக்கு சொல்
எழுச்சிப் பசிக்கு ஊக்கம்
ஏக்கப் பசிக்கு ஆறுதல்
ஏழ்மைப் பசிக்கு தன்னம்பிக்கை
ஐயப் பசிக்கு தைரியம்
ஒற்றுமைப் பசிக்கு நல்வாழ்வு
ஒழுக்கப் பசிக்கு நற்பெயர்
ஓவியப் பசிக்கு புரிதல்
ஓதல் பசிக்கு வேதம்
ஔவைப் பசிக்கு அறநூல்கள்
ஔடதப் பசிக்கு மூலிகை



தேடல் என்ற ஒன்றிருக்கும் வரையில்
பசி என்ற ஒன்றும் நம்மோடு
உரையாடிக் கொண்டே இருக்கும்
எல்லா பசியும் ஓர் நாள் அடங்கும்.
அறிவுப்பசி ஒரு நாளும் அடங்காது.

பசித்திரு
என்றும் அறிவுப் பசியோடு
விழித்திரு.

கவிஞர் ஜோ. மஞ்சு, மருங்கூர்

# அன்பு மகளே!

எவ்வளவு தொலைவில் இருந்து
வந்தாலும்
தரையைத் தொட்டவுடன்
தழுவிக்கொள்ளும்
தூய மழை நீர் போல்
இரண்டற கலந்து
இதயத்தை தொட்டுவிடுகிறாள்
என் அன்பு மகள்.

சக்தி இழந்த அலைபேசி
ஒற்றை நொடியில்
நூறை தொட்டு
தன்னை நிரப்பி கொள்வதை போல்
முழுமையாகிறது மனம்
அன்பு மகளின்
ஒற்றை முத்தத்தில்

ஆயிரம் பட்டாம் பூச்சிகள்
அடிவயிற்றில் பறக்குமாமே!
அப்படித்தான் இருந்தது
கண் சிமிட்டு நீ என்னை
அழைக்கையில்

அன்பு மகள் கண்ணசைத்தால்
கவலைகள் ஆயிரமும்
காணாமல் போகும் என்பதை
அப்பாக்கள் மட்டுமே
நம்புவார்கள்

மொத்த உலகத்தையும்
உன் பொக்கை வாய் சிரிப்பில்
புதைத்துக் கொள்ளும்
பேரழகி நீ!



உனக்கென்று
ஒரு மொழியை உருவாக்கி
அம் மொழியிலேயே
எம்மை உரையாட வைக்கும்
அற்புத சக்தி படைத்தவள் நீ

குழலை விட இனிதாமே
மழலையின் குரல்
எவ்வளவு உண்மை!

அப்பா என்பதை மட்டும்
அழுத்தம் திருத்தமாக அழைக்கும்
என் அன்பு மகளே

நீ வாழ்க! வளர்க!
தமிழ் போல்
செழித்து வளர்க!

கவிஞர் சி முத்துராசன், அரியலூர்

# பகலவன்

பகலவன் உதிக்க
காத்திருந்த தருணமெல்லாம்
மாறியே போக.
ஆதி ஜனனிக்கும் நொடியியே
சுட்டெறிக்க.

வீட்டில் வாசல் தாண்டி
பாதம் பதிக்கும் யோசனை
ஆழ் மனதில் அச்சமூட்டவே

அந்தி மாலையோடு
சூரியன் மறைய
மென்மையாய் வீசிடும் காற்றில்
மேனியை தணித்திட



காலை துவங்கி மாலை வரை
நீரோடு நனைத்தே
சூட்டை தணிக்க
இறுதியில் தும்மலும் இருமலுமே
மிச்சமாய்.

படுத்தும் வெயிலும்
பருவம் என்று மாறிடுமோ.

கவிஞர் சீ. கார்த்திகா, பழநி

# மாலவனும் வைணவமும்

பகுதி 35 ஆண்டாள் தொடர்ச்சி 5


ஆண்டாள்தன் வில்லிபுத்தூர் ஆலயத்துக் கோபுரமே
தமிழ்நாடு அரசதனின் இலச்சினையாய் காண்கின்றோம்!
ஆடிபூர தேரோட்ட உற்சவமே! தேரதுவோ
மிகப்பெரிது! பலநூற்றாண் டுபழமைத்து! கலைநயங்கள்
நுண்மைத்து! மரச்சிற்பம் எண்ணிலதாய்க் கொண்டதுவே!
மரச்சக்கரம் ஒன்பதுண்டே! மேலடுக்கு சாரங்கள்
ஒன்பதெண்ணில் கொண்டதுவே! அலங்காரப் பதாகைகள்
பேரெழிலே! உச்சிதனில் கும்பகலசம் வனப்புடைத்து!
ஐந்தான பகுதிகள்சேர் இணைப்பினது! மேலமைந்த
பட்டுகொடி மிளிரழகு மேன்மைத்தே! பெருவடங்கள்
ஒன்பதுண்டு வீதியுலா காணுதற்கே! திருப்பாவை
முப்பதொடு நாச்சியார்தம் திருமொழியும் ஒருநூற்று
நாற்பத்து மூன்றுடைத்து! நாலாயிர பிரபந்த
முதலாயிர பாடல்களில் ஐநூற்று நான்குமுதல்
அறுநூற்று நாற்பத்து ஆறுவரை ஒருநூற்று
நாற்பத்து மூன்றுபாடல் கொண்டதுவே! கண்ணனையே
நாயகனாய் ஆண்டாளோ அடைதற்கு துடிக்கின்ற
தவிப்பதனை சாற்றுவது! காதல்சுவை மிக்கதுவே!
பதிநான்கு துணைத்தலைப்பில் ஒவ்வொன்றிலும் பத்தெனவே
பாத்தொகுப்பு ஆக்கிட்டார்! முழுதுணர்ந்து மகிழ்வோமே!



*கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)*

# ஹைக்கூ

செடியை பிடுங்க
மௌனமாய் உதிர்கிறது
வேரில் கலந்த மண்.



கவிஞர் சீ. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# ஹைக்கூ

உழவனான மென்பொறியாளர்
இல்லத்தில் நெற்கதிர் தோரணம்
பசியாறும் குருவிகள்.

தாமரைக்குளத்தில் அடைமழை
மீதமிருக்கும் இலையின் துளியில்
நீரருந்தும் குருவி.



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

அகிலத்தை அழகாய் ஆட்டுவிக்கும் எமதன்னைத் தமிழே!
ஆர்வமாய் அயல் நாட்டவரையும் கற்கத் தூண்டும் ஆசைத் தமிழே!

இயல் இசை நாடகத்தைத் தந்த இயல்புத் தமிழே!
ஈரடிக் குறளில் வாழ்வியலை உணர்த்திய குறளமுதே!

உவமைகளும் உருவகங்களும் ஒருங்கே கொண்ட உள்ளார்ந்த தமிழே!
ஊஞ்சலாய் களிப்பூட்டி உணர்வில் கலந்த இன்னிசை விருந்தே!

எழுத்தில் மிளிர்ந்த எனதருமைத் தமிழே!
ஏகாந்தத்தை அள்ளித் தெளித்த ஏற்றமிகு தமிழே!

ஐயன் வள்ளுவன் தந்த வாழ்வியல் தமிழே!
ஒப்பற்ற நூல்களை ஒருங்கே தந்த ஒற்றுமைத் தமிழே!

ஓடுகிறார் நிதமும் ஓயாமல் தமிழ்தனைக் கற்றிடவே!
ஔவை அருளிய ஆத்திசூடித் தமிழே!

இஃதாகிய செந்தமிழின் சிறப்பு வேறு மொழிகளில் தான் உண்டோ
உலக மொழிகள் யாவற்றுள்ளும் உயிரில் உணர்வில் இனிப்பது தமிழ் தானே!

தமிழ்


கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# மாயமானை வீழ்த்திய மாய வலை

## புத்தக அனுபவம் — கவிதை நூல்

கவிதைகள் அழகிய கவிநடை, கவிநயத்துடன் இருப்பது படிப்பாளிகளை எப்போதும் ஈர்க்கும். "மாயமானை வீழ்த்திய மாய வலை" -. கவிதை நூல் எழுதிய கவிமாமணி இரஜகை நிலவன் கவிதைகள் அனைத்தும் சிறப்பே.

மரம்நடு வீடுகளில் சமூகக் கவிதை, கருப்பு வைரம் காமராசருக்கு கவிதாஞ்சலி, விழுந்தாலும் எழுந்தே வீதிவலம் வருவாயா- தேவதை வரிகள், இனி வருமா இந்த அழகிய கிராமத்து வாழ்க்கை, உழைப்பால் உயரந்திடு உலகம் புகழட்டும், ஊழ்வினையின் உயிரோட்டம் உடைத்திட்ட மாதிவள் கண்ணகி, பூர்த்தி செய்யத்தானே பூவுலகிற்கே அழைத்தோம். மழையே, காக்கிச் சட்டைக்குள்ளே கனிந்த இதயம், வாழ்வே வருமானால் வாழ்நாளெல்லாம் வசந்தமே, வெளஞ்ச கதிரும் வெக்கப்பட்ட பொண்ணாட்டம் தல குனிஞ்சி நிக்குதே உச்சியில பாரந்தாங்காம, இருந்தாலும் தொல்லை இல்லையெனில் ஏக்கம் தொண்டையில் நிற்கும் தொலைவான சொர்க்கம், நாம் உணர்ந்த நல்லவைகளையே நாளைய தலைமுறை காணச்செய்யணுமே... கவிதை வரிகளில் நூலாசிரியரின் கவிநயம் வெளிப்படுகிறது.




வெகுண்டு எழுந்திடு வஞ்சகரை வீழ்த்திடு, தொடரும் நாடகங்களில் திரைகள் விழுவதில்லை திசைகளறிந்து நடந்தால் திணறல்கள் வருவதில்லை, முக வரிகள் விழுந்தாலும் முகவரிகளோடு வாழ்க்கை போன்ற கவிதை வரிகளில் நூலாசிரியர் கவிஞர் இரஜகை நிலவனின் எதுகை மோனைகளோடு அழகியல் கவிதைகள் தொடர்கின்றன.

*திரு ப. பன்னீர் செல்வம், செங்கல்பட்டு*

அழகான தலைப்புகளில் கற்பனை வரிகளும் அனுபவ வரிகளும் வடித்த நூலாசிரியர் மேலும் பல நூல்களை வெளியிடக் கேட்டுக் கொள்வதோடு என்றும் என் இனிய வாழ்த்துகளும் பாராட்டுகளும்.




திரு ப. பன்னீர் செல்வம், செங்கல்பட்டு

# ஆகாயத்தில்

## சிறு நவீனம் அத்தியாயம் 8



சுவேதாவும் சங்கரும் பெட்டிப் படுக்கைகளை டிராலியில் வைத்துத் தள்ளிக்கொண்டு வர "மாமியார் சொன்னதெல்லாம் மனசிலே வைத்துக் கொண்டிருக்காமல் மாப்பிள்ளையோடு ஒழுங்காக குடும்பம் நடத்து. முடிஞ்ச வரைக்கும் குவைத்திலேயே இருக்கப்பார். இங்கே வந்து பெருசுகளோட சண்டை போட்டுக் கொண்டிருப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கும்." அம்மா உபதேசித்துக் கொண்டே வந்தாள்.

வாயில் வந்ததும் "போயிட்டு வாங்க மாப்பிள்ளை. கண்ணை துடைச்சுக்கோ" சுவேதாவின் அப்பா வழியனுப்பினார்.
குவைத் செல்லும் விமானம் ஏரக்குறைய ஒரு ராட்சஸ பறவையைப் போல விமானத்திற்கான இறைச்சலுடன் பயணத்திற்கு தயாராக நின்று கொண்டிருந்தது.

விமானப் பயணிகள் எல்லோரும் ஏறிவிட சுவேதா,சங்கர், குடும்பம் முன் வரிசையில் அமர, டாக்டரோடு பார்வதி அம்மாளும் உதவிக்கு ஒரு உதவி செவிலியும் அமர்ந்திருந்தனர். அமைச்சர் தமிழரசன் விமான டி.வி யைத் தவிர்த்து. குவைத்தில் இறங்கியதும் தமிழர் அமைப்பு ஒன்றில் பேசுவதற்கு குறிப்பெடுத்துக் கொண்டிருக்க, விமானி குமார் விமானி ப்ரேம் சந்தோடு சேர்ந்து விமானத்தை ஓட்ட ஆரம்பித்தான்.

திரு இரஜகைநிலவன்

ஸ்வேதாவும் அவள் கணவனும் புத்தகம் புரட்ட ஆரம்பித்தனர். இனிகோ தங்களுடைய நாடகக்குழுவினர் எல்லோரும் அமர்ந்து விட்டர்களா என்று சரி பார்த்துவிட்டு நாடகத்திற்கான கத்தி, வாள், மகுடம் மற்றும் மன்னன் வேடத்திற்கான உடைகள் அடங்கிய பெட்டியை காலுக்குள் தள்ளி வைத்து விட்டு தண்ணீர் பாட்டிலிலிருந்து தண்ணீர் குடித்தான்.

தேவ் தன்னுடைய முதல் இன்னிங்ஸை எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்பதை மனதால் பேட்டிங் செய்ய ஆரம்பித்தான். கடைசி நிமிடத்தில் வந்த மெரீனா பயந்து கொண்டே தன் பைகளை மெல்ல வைத்துக்கொண்டு அமர்ந்தாள்.

தேவ் தன் முதல் இன்னிங்ஸ் எப்படி ஆட வேண்டும் என்று யோசித்தவாறு கையிலிருந்த பேட்டை திருப்பி பார்த்துக்கொண்டு இருந்த போது பணிப்பெண் வாங்கி மேலே வைத்தாள்.

விமானப் பயணிகள் எல்லோரும் தங்கள் இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டுகளை விடுவித்துக்கொள்ள, விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது, " குமார் நாம் எல்லாவற்றையும் செக் பண்ணினோம் ஆனா இந்த திராட்டிலே மறந்திட்டோம். இது வேலை செய்ய மாட்டேங்குதே" என்றார் ப்ரேம் சந்த்.

" என்ன இதை செக் பண்ணாம..... மண்ணாங்கட்டி வேலையா பார்த்துக்கிட்டிருந்தீங்க.." என்று கத்தியவாறு, அசைத்துப்பார்த்தவர்,

# ஆகாயத்தில்

## சிறு நவீனம் அத்தியாயம் 8

"சரி" எல்லோரும் பரலோகம் போக வேண்டியது தான். காதரினைக் கூப்பிட்டு எமெர்ஜென்ஸி எக்சிட்டை திறக்கச்சொல்லி எல்லோரையும் பாராசூட்டை எடுத்துக்கிட்டு குதிக்கச் சொல்லி அறிவிக்கச்சொல்லுங்கள்" என்றார் மிகக்கோபமாக.

அவர் உள்ளேயிருந்து கத்திக்கொண்டிருக்க, திடீரென்று பயணிகள் பக்கமிருந்து, ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் எழுந்து கொண்டார்கள்.

"யாரும் அசையக் கூடாது. விமானி குமார் தலையில் குறி வைத்து எங்கள் நண்பன் துப்பாக்கியோடு அமர்ந்திருக்கிறான். இந்திய அரசாங்கம் எங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால் நாங்கள் இந்த விமானத்தைக் கடத்துகிறோம்" என்றனர்.

விமானம் ஆட ஆரம்பித்தது.




முற்றும்

திரு இரஜகைநிலவன்

# கட்டுரை

## வாழ்க்கை:



கிருஷ்ணன் நம்பி
(24 ஜூலை 1932 - 16 ஜூன் 1976)

அழகியபாண்டியபுரத்தில் விவசாயம் செய்துவந்த கிருஷ்ணன் நம்பியின் தந்தை 1939இன் பிற்பகுதியில் நாகர்கோவிலில் உர வியாபாரத்தை ஆரம்பித்தார். 1940 ஆம் ஆண்டு நம்பியின் தந்தை குடியிருப்பை அழகிய பாண்டியபுரத்திலிருந்து நாகர்கோவிலில் கிருஷ்ணன் கோவிலுக்கு மாற்றிக் கொண்டார்.

1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் தேதி கிருஷ்ணன் நம்பிக்கு திருமணம் ஆயிற்று. மனைவி பெயர் ஜெயலட்சுமி. ' நவசக்தி'யில் ஃபுரூஃப் ரீடர் வேலை பார்த்தார். அப்போது ப. ஜீவானந்தம் அவர்களின் தொடர்பு கிடைத்தது . கிருஷ்ணன் நம்பிக்கு மூன்று மகன்கள், இரண்டு மகள்கள்.

## இலக்கிய வாழ்க்கை:

கிருஷ்ணன் நம்பி வை. கோவிந்தனின் சக்தியில் ' நாட்டுப்பாடல்கள்' பற்றிய அவரது முதல் கட்டுரையை எழுதினார். 1950 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்துசிறுவர் பத்திரிகையான 'கண்ணனில்' தொடர்ந்து 'சசிதேவன்' என்கிற பெயரில் குழந்தைப் பாடல்கள் எழுதினார். கிட்டத்தட்ட சுமார் 35 பாடல்கள் கண்ணனில் வெளிவந்தன. அச்சில் வெளிவந்த நம்பியின் முதல் சிறுகதை 'சுதந்திர தினம்' (1951).

திரு குமரர். தர்மசீலன், இதழாசிரியர்

# கிருஷ்ணன் நம்பி

## கட்டுரை

1950 இல் கிருஷ்ணன் நம்பிக்கும் சுந்தர ராமசாமிக்கும், ராமசாமி கொண்டுவந்த 'புதுமைப்பித்தன் நினைவு மலரை' ஒட்டி நட்பு ஏற்பட்டது. கிட்டதட்ட 25 வருடங்கள் இடைவெளியின்றி தொடர்ந்த நட்பு இது.

விஜயபாஸ்கரன் 'சரஸ்வதி'யை தொடங்கியபோது அதில் நம்பி சுமார் 11 குழந்தைக் கவிதைகள் எழுதினார். தொடர்ந்து சிறுகதைகளும் எழுத ஆரம்பித்தார். '

"நீலக்கடல்":

'ஒரு படைப்பாளியின் வலிமையை ஒரு கதையிலேயே கண்டறிய முடியும். பி.எஸ்.இராமையாவின் 'நட்சத்திர குழந்தைகள்'-க்குச் சமமான குழந்தைகளின் மன உலகை நுட்பமாகக் கட்டமைத்த கதைகளை விரல் விட்டு எண்ணி விட முடியும். நட்சத்திர குழந்தைகளுக்கு அடுத்து, நம்பியின் 'நீலக்கடல்' அப்படியான அழகான கதை. சிறுகதையின் இலக்கணத்தை உடைத்த கதை இது.



# கிருஷ்ணன் நம்பி


## கட்டுரை

### சுஜாதா:

இப்பொழுது சுஜாதாவின் பதிவைப் பார்ப்போம். தனக்குப் பிடித்த 10 சிறுகதைகள் பற்றி அவர் குறிப்பிட்ட பதிவில், நம்பியின் 'மருமகள் வாக்கு' கதையைக் குறிப்பிட்டுப் பதிந்துள்ளது: "மருமகள் வாக்கு — இந்தக் கதை சிரஞ்சீவி. சாவே கிடையாது. இந்த ஒரு கதையினாலேயே, நம்பி தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறுவார். உலக இலக்கிய வரலாற்றிலேயே கூட இடம் உண்டு." இவரும் நம்பியை நேரில் அறிந்தவர் அல்ல.




### சாரு நிவேதிதா:



"இப்போதுதான் முதல்முறையாக கிருஷ்ணன் நம்பியைப் படிக்கிறேன். 'மருமகள் வாக்கு' என்ற ஒரே கதையில் தெரிந்துவிட்டது கிருஷ்ணன் நம்பி உலகின் மகத்தான சிறுகதை ஆசிரியர்களில் ஒருவர் என்று." இது, தினமணியில் சாரு நிவேதிதா எழுதிய பழுப்பு நிறப் பக்கங்கள் கட்டுரையில் இடம்பெற்றிருக்கிறது.

திரு குமரர். தர்மசீலன், இதழாசிரியர்

கட்டுரை

**படைப்புகள்:**

'யானை என்ன யானை?' குழந்தைப்பாடல்கள் 1965
காலைமுதல் சிறுகதைகள்
நீலக்கடல் சிறுகதைகள்

**இறப்பு:**

1974 ஆம் ஆண்டு புற்றுநோய் காரணமாக கிருஷ்ணன் நம்பியின் இடது காலை ஆபரேஷன் செய்து எடுக்கவேண்டியதாகிவிட்டது. காலை எடுத்தபிறகு ஒன்றரை ஆண்டுகள்தான் அவர் உயிருடன் இருந்தார். நுரையீரல் பாதிக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் தேதி காலையில் நாகர்கோவில் மத்தியாஸ் மருத்துவமனையில் அவர் உயிர் பிரிந்தது.


கிருஷ்ணன் நம்பி
(24 ஜூலை 1932 - 16 ஜூன் 1976)

திரு குமார். தர்மசீலன், இதழாசிரியர்


நாளை
நமதே
உன்னையே
நீ நம்பு
ஓர் நாள்
உயர்வு நிச்சயம்
அகர முதல இலக்கியப் பேரவை
Aagaramuthalaa
www.aagaramuthala.com
aagaramuthala@gmail.com

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com